Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 447/2019**

**Deposition of PW.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராஜ் | ஜாதி | : | |
| த/பெ | : | சின்னச்சாமி | தொழில் | : | வனக்காப்பாளர், கன்னிவாடி வனச்சரகம் |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | 60/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.01.2025.

(Accused A1, A2, A4 present, A3 was died.)

முதல் விசாரணை

நான் தற்பொழுது கன்னிவாடி வனச்சரக அலுவலகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.11.2016 அன்று இரவு 11.00 மணியளவில் கன்னிவாடி மலை 1 வது பிளாக்கில் லைட் வெளிச்சம் தெரிந்ததால் கன்னிவாடி பிரிவு மற்றும் செம்பட்டி பிரிவு வனவர்கள், பெரியூர் பீட் வனக்காப்பாளர், சித்தையன்கோட்டை பீட் வனக்காப்பாளர் ஆகியோருடன் நானும் ரோந்து பணிக்கு சென்றோம். இரவு 01.00 மணியளவில் வெளிச்சம் தெரிந்த வைகை பண்ணை அருகே சென்று பார்த்தபோது அங்கு 4 நபர்கள் ஒரு நாட்டு துப்பாக்கியுடன் இருந்தார்கள். உடன் அரிவாள், கத்தி ஆகிய ஆயுதங்களுடன் ஒரு ஆண் மயில் இறந்த நிலையிலும் ஒரு பெண் மயில் உயிருடன் காயத்துடனும் வைத்திருந்தார்கள். ஆண் மயிலை வெட்டி கறியாக்கி வைத்திருந்தார்கள். அந்த எதிரிகள் நான்கு பேரையும் அவர்களின் 3 இருசக்கர வாகனங்களையும் ஏனைய வழக்கு சொத்துக்களையும் எதிரிகளுடன் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு அழைத்து வந்தோம். பின்பு அவர்களை விசாரணை செய்து வனச்சரகர் வழக்கு பதிவு செய்து அவர்களை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தார். மேற்கண்ட நான்கு எதிரிகளான யோவான், சோவியத்ராஜா, மைக்கேல், குணசேகரன் ஆகியோர் எனது முன்னிலையில் கன்னிவாடி வனச்சரக அலுவலரிடம் மயிலை வேட்டையாடிய குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். அதனை வனச்சரக அலுவலர் பதிவு செய்தார். மேற்கண்ட 4 எதிரிகளும் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் எதிரிகள் கொடுத்த 4 ஒப்புதல் வாக்குமூலத்திலும் என்னுடைய சாட்சி கையொப்பம் உள்ளது. வனச்சரக அலுவலர் எனது முன்னிலையில் ஸ்தல மகசர் தயார் செய்தார். அதிலும் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஸ்தல மகசரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை

**Sd/.Thiru.P.Jaisankar**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.